**<u>02.06.2026</u>**

**<u>MCOP. No.41/2025</u>**

**<u>ம.சா.1 – திருமதி. ராதா.</u>**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார்.</u>**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது கணவர் தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.14 முதல் ம.சா.ஆ.22 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு 6 ஏக்கர் தென்னந்தோப்பு விவசாயம் நிலம் உள்ளது. அதில் தற்பொழுது வருமானம் வந்துக்கொண்டிருக்கிறது என்றால் சரிதான். எனது கணவரின் இறப்பினால் எனக்கு வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட TN 88 J 7479 என்ற பதிவெண் கொண்ட பேருந்தை அதன் ஓட்டுநர் மிகவும் கவணமாகவும் நிதனமாகவும் இயக்கி வந்த நிலையில் எனது கனவர் தலைக்கவசம் அணியாமல் கவனக்குறைவாகவும் TN 60 J 8885 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை மண் மேட்டில் இயக்கி வந்து மண் வாரிவிட்டு மேற்படி விபத்தில் தனக்குத்தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் இறக்கும்பொழுது எலக்ட்ரானிக் மெக்கானிக் மற்றும் விவசாயம் செய்து வந்தார். அது சம்பந்தப்பட்ட வருமான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு ஊர்ஜிதத்தில் இல்லாததால்தான் அந்த காப்பீடு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரில்லை. எனது கணவரின் கவனக்குறைவினால் ஏற்பட்ட விபத்திற்கு 1, 2 எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க



GEETHA Digitally signed by GEETHA Date: 2026.06.02 17:00:17 +0530

கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரயில்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது என்றும் மனு தள்ளபடி செய்யதக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

GEETHA Digitally signed by GEETHA Date: 2026.06.02 17:00:22 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 02.06.2026

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.41/2025**

Deposition of Witness : PW2 (**மூன்றாம் தரப்பினர்**)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கார்த்திக் | Father's Name | : | செல்வம். |
| Village | : | மாலையகவுண்டன்பட்டி. | Taluk | : | தேனி. |
| Caste | : | – | Calling | : | |
| Religion | : | – | Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 02.06.2026

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் இம்மனுவின் மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைகள் தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். ஆதார் அடையாள அட்டை நகல் **சா.சா.ஆ.1** ஆகும்.

**2 –ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்தில் இறந்த நபர் எனக்கு உறவினரா அல்லது நண்பரா என்றால் தெரிந்த நபர் பக்கத்து தோட்டதுகாரரர் ஆவார். விபத்து சமயத்தில் நான் ஐயங்கார் பேக்கரியில் நின்றுக்கொண்டிருந்தேன். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தை 100 மீட்டர் தொலைவிலிருந்து பார்த்தேன். இறந்த நபர் தென்வடல் சாலைக்கு கிழக்கு பக்கம் உள்ள மண் பாதையில் தனது வாகனத்தை ஓட்டி சென்றார். விபத்து சம்பந்தமாக யார்

புகார் கொடுத்தது என்று எனக்கு தெரியாது. இறந்த நபர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் ஏன் புகார் அளிக்கவில்லை என்றால் நான் விபத்தை நேரில் பார்த்த அதிர்ச்சியில் இருந்ததால் புகாரினை கொடுக்கவில்லை. நான் விபத்து நடந்த இடத்தில் இல்லை என்றும் விபத்தை நான் நேரடியாக பார்க்கவும் இல்லை என்றும் அதனால்தான் காவல் நிலையத்தில் புகாரும் முதலுதவி சிகிச்சை அளிக்க ஏற்பாடு எதுவும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்த நபர் எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவரது குடும்பத்துக்கு ஆதரவாக சாட்சிம் அளிக்கிறேன் என்றும் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. இறந்த நபர் மண் மேட்டில் வாகனத்தை இயக்கியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

GEETHA Digitally signed by GEETHA Date: 2026.06.02 17:00:31 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 02.06.2026